1981 மார்ச் 6]

கொடைக்கானலில் வழக்குகள் விசாரணை.

*வினா எண் 406 : திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானலில் சிவில் கிரிமினல் வழக்குகள் தற்பொழுது யாரால் விசாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கொடைக்கானலில், சிவில் வழக்குகள் முகாம் கோர்ட்டு மூலமாக மாவட்ட முன்சீப், பெரியகுளம், அவர்களாலும், குற்றவியல் வழக்குகள் நிலக்கோட்டை இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிபதி அவர்களாலும் விசாரிக்கப்படுகின்றன.

தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கம்.

*வினா எண் 407 : திரு. பாபு கோவிந்தராஜன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனை சங்கத்தில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் மீது அரசிடமும் மாநில கூட்டுறவுப் பதிவாளரிடமும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18 ஆம் நாளில் கொடுத்த புகார் மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) அதனால் அந்தத் தொழிலாளர்கள் மீது அதிகாரிகள் பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அரசுக்குத் தகவல் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) புகார் மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்யப்பட்டு அவை சரியானவை அல்ல என தெரிய வந்தது.

(ஆ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1981 மார்ச் 6

திரு. பாபு கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயுள்ள யூனியன் தொழிலாளர்கள் ஒரு தீர்மானம் போட்டு, இப்படி அங்கே ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று புகார் கொடுத்தார்கள். அப்படி புகார் கொடுத்த யூனியன் தொழிலாளர்களை விசாரிக்காமல், யார் அந்த ஊழலுக்குக் காரணமாக இருக்கிறார்களோ அந்த அதிகாரிகளை விசாரித்து இருக்கிறார்கள். இது குறித்து, நான மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பல முறை தனிப்பட்ட முறையிலும் சொல்லியிருக்கிறேன். மேலும், புகார் கொடுத்தவர்கள் அந்த இடத்தைவிட்டு வேண்டுமென்றே மாற்றப்பட்டு இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரி மீது ஏகப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன, சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் போன்று நல்ல முறையில் இயங்கி வந்த அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்ச ரூபாய், 5 இலட்ச ரூபாய் என்கிற அளவிற்கு நஷ்டம் வந்து கொண்டு இருக்கிறது. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்த நிகழ்ச்சியை விவரிப்பதைத் தவிர்த்து, கேள்வியைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. பாபு கோவிந்தராஜன் : புகார் கொடுத்தவர்களை, விசாரிக்காமல் இருந்ததற்கான காரணம் என்ன ?

[முற்பகல் 9—50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, விசாரணை என்றாலே விதிப்படி "கம்பிளைனண்ட் அண்ட் அக்யூஸ்ட்" ஆகிய இருதரப்பினரையும் விசாரித்து முடிவெடுப்பதுதான் வழக்கம். அந்த அடிப்படையில் விசாரணை நடந்திருக்கிறது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபடி அந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்த ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் மீண்டும் விசாரிக்க ஏற்பாடு செய்கிறோம். அவர்கள் சொல்வது சரியாக இருந்தால் கண்டிப்பாக மறுவிசாரணை செய்ய உத்தரவிடப்படும்.

திரு. பாபு கோவிந்தராஜன் : தலைவரவர்களே, அந்த யூனியனிலிருந்து தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறார்கள். ஆனால், புகார் கொடுத்த அந்த யூனியனிலுள்ள யாரையும் விசாரிக்கவில்லை. மீண்டும் விசாரிக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள், நன்றி. அது மட்டுமல்ல. அந்த எஸ்.ஓ-வுக்கு வேண்டாதவர்களாக இருந்தால் சிறிதளவு ஸ்டாக்கில் ஷார்ட் இருந்தாலும் நடவடிக்கை எடுக்கிறார், சஸ்பெண்ட் செய்கிறார். உரிய முறையில் நடவடிக்கை எடுக்கட்டும் ; வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், அவர்களுக்கு வேண்டியவர்கள் அல்லது அவருக்கு இலஞ்சம் கொடுக்கிறவர்கள் யாராக இருக்கி

றார்களோ அவர்களால் 100 கிலோ, 200 கிலோ ஷார்ட்டேஜ் வந்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை; சமாளித்து விடுகிறார். இந்தத் தவறுகள் சம்பந்தமாக என்னிடம் '' போட்டோ ஸ்டெட் காப்பி '' எல்லாம் இருக்கிறது; வேண்டுமென்றால் அமைச்சரிடம் தருகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஆதாரங்களையும் அரசுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் மீண்டும் விசாரணை நடத்த அரசு உத்தரவிடும்.

காவிரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டம்.

*வினா எண். 408—திரு. கே. நாராயணசாமி: திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை, காவேரி ஆற்றிலிருந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) திட்டத்தின் மதிப்பு என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சென்னை குடிநீர் வசதியை பெருக்க, திருச்சி மாவட்டம், கட்டளைப் பகுதியிலிருந்து காவேரி நதிநீரை கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) ( ) கட்டளைப் பகுதியிலிருந்து செம்பரம்பாக்கம் வரை நீர் கொண்டு வர—( ) ரூபாய் 203 கோடி (தலைமைப் பொறியாளர் நீர்ப்பாசன மதிப்பீடு)

(ii) ரூபாய் 259 கோடி (உலக வங்கி மதிப்பீடு முறையில்.)

(b) செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னை நகருக்கு நீரை, சுத்திகரித்து கொண்டுவர ரூபாய் 200 கோடி.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, திருச்சி, குளித்தலை, லால்குடி பகுதிகளைச் சேர்ந்த பெரும் விவசாயிகள் என்ற பேரால் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும், தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்) அவர்களையும் இந்தத் திட்டத்தை கைவிட வேண்டுமென்று வற்புறுத்தியுள்ளார்களா? அரசினுடைய நோக்கம் என்ன? இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா? அதிலே தீவிர கவனம் செலுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.